# தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை
# அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயில்
# இராயப்பேட்டை, சென்னை-14

## வேலை வாய்ப்பு விண்ணப்பம் கோரும் விளம்பரம் அறிவிப்பு

சென்னை-14, இராயப்பேட்டை, அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் கீழ்க்கண்ட விவரப்படியான காலிப்பணியிடங்களுக்கு தகுதியுள்ள இந்து மதத்தினைச் சார்ந்த நபர்கள் 19.10.2022 முதல் 17.11.2022 வரை அலுவலக நாட்களில் காலை 10.10 மணி முதல் மாலை 5.45 மணி வரை விண்ணப்பம் பெற்றுக்கொள்ளலாம்.

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் | காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1 | கணினி இயக்குபவர் | PAY MATRIX - 15, 15300-48700 அடிப்படை சம்பளம் ரூ.15300 | 1 | 1. பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான கல்வித்தகுதி பெற்றிருக்க வேண்டும். 2. அரசு தொழில்நுட்ப தட்டச்சர் தேர்வில் தட்டச்சு தேர்ச்சி பெற்றிருத்தல் (i) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுநிலை (அல்லது) (ii) தமிழில் முதுநிலை மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை (அல்லது) (iii) ஆங்கிலத்தில் முதுநிலை மற்றும் தமிழில் இளநிலை ஆனால் இனம் (i)-ல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியை பெற்ற விண்ணப்பதாரர்கள் வரப் பெறாத நிலையில் இனம் (ii)-ல் அல்லது இனம் (iii)-ல் உள்ள தகுதிகளை பெற்ற விண்ணப்பதாரர்கள் மேற்சொன்ன முன்னுரிமை வரிசையில் நியமிக்கப்படலாம். கணினி பயன்பாடு மற்றும் அலுவலகத் தானியக்கத்தில் சான்றிதழ் படிப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான அங்கீகரிக்கப்பட்ட படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 2 | மின் பணியாளர் | PAY MATRIX - 13, 12600-39900 அடிப்படை சம்பளம் ரூ. 12600 | 1 | 1. அரசு/அரசால் அங்கீகரிக்கப்பட்ட மின் தொழில் பயிற்சி நிறுவன சான்றிதழ் (ITI) பெற்றிருக்க வேண்டும். மின் உரிமம் வாரியத்தின் B-சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 3 | அர்ச்சகர் நிலை 2 | PAY MATRIX - 14, 13200-41800 அடிப்படை சம்பளம் ரூ.13200 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். 2. அரசு நிறுவனங்களால் அல்லது ஏனைய யாதொரு நிறுவனத்தால் நடத்தப்படும் ஆகமப்பள்ளி அல்லது வேதபாடசாலையில் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஓராண்டு படிப்பினை மேற்கொண்டதாக வழங்கப்பட்ட சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |
| 4 | ஓதுவார் | PAY MATRIX - 13, 12600-39900 அடிப்படை சம்பளம் ரூ.12600 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். 2. சமய நிறுவனங்களால் அல்லது அரசு நிறுவனங்களால் அல்லது ஏனைய யாதொரு நிறுவனத்தால் நடத்தப்படும் தேவாரப்பாடசாலையில் இதன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் மூன்றாண்டு படிப்பினை மேற்கொண்டதாக வழங்கப்பட்ட சான்றிதழைப்பெற்றிருக்க வேண்டும். |
| 5 | சுயம்பாகி | PAY MATRIX - 14, 13200-41800 அடிப்படை சம்பளம் ரூ.13200 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். 2. திருக்கோயில்களில் ஆகம விதிப்படி நைவேத்தியம் மற்றும் பிரசாதம் தயார் செய்ய தெரிந்திருக்க வேண்டும் மற்றும் திருக்கோயில்களில் பூஜை மற்றும் சடங்குகள் பற்றி தெரிந்திருக்க வேண்டும். |
| 6 | மேளக்குழு (நாதஸ்வரம் பணிக்கு மட்டும்) | PAY MATRIX - 15, 15300-48700 அடிப்படை சம்பளம் ரூ.15300 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். 2. சமய நிறுவனங்கள் அல்லது தமிழ்நாடு அரசு நிறுவனம் அல்லது பல்கலைகழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இசைப்பள்ளியில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 7 | பகல் காவலர் | PAY MATRIX - 12, 11600-36800 அடிப்படை சம்பளம் ரூ.11600 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். 2. காவலர் பணி செய்ய தகுந்த உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். |
| 8 | இரவு காவலர் | PAY MATRIX - 12, 11600-36800 அடிப்படை சம்பளம் ரூ.11600 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். 2. காவலர் பணி செய்ய தகுந்த உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். |
| 9 | துப்பரவாளர் | PAY MATRIX - 10, 10000-31500 அடிப்படை சம்பளம் ரூ.10000 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். 2. துப்புரவு பணி செய்ய தகுந்த உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். |
| | கூடுதல் | | 9 | |

விண்ணப்பதாரர் 01.07.2022 அன்று 18 வயது முழுமையடைந்தவராகவும் 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். பணியிட விவரங்களுக்கான கல்வித்தகுதி, வயதுவரம்பு, நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை அலுவலக வேலை நேரங்களில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பபடிவம் மற்றும் நிபந்தனைகளை hrce.tn.gov.in என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் செயல் அலுவலர், அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயில், இராயப்பேட்டை, சென்னை-14 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்.17.11.2022 அன்று மாலை 5.45 மணி வரை மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். அதன் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**கோ.முரளிதரன்**
**செயல் அலுவலர்**

**ஆர்.ஹரிஹரன்**
**தக்கார்/ துணை ஆணையர் /**
**நகை சரிபார்ப்பு அலுவலர், சென்னை-04**

**சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்**

செ.ம.தொ.இ/ 1060/வரைகலை/2022